
திருவாசகம் - 27
புணர்ச்சிப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# புணர்ச்சிப்பத்து கதை வடிவில்
# அத்துவித இலக்கணம்
# திருப்பெருந்துறையில் அருளியது

**சுடர்பொற்குன்றைத் தோளாமுத்தை வாளா தொழும்பு கந்து**

**கடைபட்டேனை ஆண்டுகொண்ட கருணாலயனைக் கருமால்**

**பிரமன் தடைபட் டின்னுஞ் சாரா மாட்டாத் தன்னைத் தந்த**

**என்னா ரமுதைப் புடைபட் டிருப்ப தென்றுகொல்லோஎன்**

**பொல்லா மணியைப் புணர்ந்தே 01**

திருச்செல்வம் கதிரேசனது வீட்டுக்கு வந்து முற்றத்தில் வேப்பமர நிழலில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமராது நிலத்தில் அமர்ந்து கொண்டான். அவன் தோளில் போட்டிருந்த கந்தல் சால்வையை எடுத்து இடுப்பில் கட்டினான். வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த கதிரேசன் நிலத்தில் அமர்ந்திருந்த திருச்செல்வத்தைப் பார்த்தார். அவன் எழுந்து நின்றான்.

“உனக்கு எதைச் சொல்லியும் பயனில்லை. வருபவர்கள் வசதியாக இருப்பதற்காக நாற்காலியைப் போட்டுள்ளேன். அதில் இரு என்று சொன்னால் கேட்கிறாயில்லை. இது தானா நீ என்னை மதிக்கும் முறை” கதிரேசன் கோபப்பட்டார்.

“ஐயா, கோபிக்காதீர்கள். நீங்கள் பெரும் சிவபக்தர். பக்தர்களை மதிப்பவர். ஆனால் மற்றவர்கள் உங்களை மதிக்க வேண்டுமானால் அற்பனான நான் உங்களை மதித்துத் தரையில் உட்கார வேண்டும்” என்றான் திருச்செல்வம்.

“நீ ஒரு சிவபக்தன். சிவன் தானாக எழுந்த சோதிப்பிழம்பு. அகண்ட வஸ்து. அற்பனாக இருந்தாலும், தனது தொண்டர்களுக்கு அருள் புரிபவன். பிரமதேவன் எனினும் செருக்குற்றவர்களை அவன் மதியாதவன். அப்படியான அமிர்த சொரூபனை நான் எப்போது அடையப் போகிறேன்” என்கிறார் மாணிக்கவாசகர். அவர்

அற்பனென்றாலும் பக்தனாக இருந்தால் மன்னனுக்குக் கொடுக்கும் மதிப்பைக் கொடுப்பார். பிரமதேவனைப்போலப் பெரும் பதவியில் இருந்தாலும், அவர்களை மதிக்க மாட்டார். அத்துடன் அவர்களால் அவனை அறிய முடியாது. நீ பெரும் பக்தன். உனது மகன் சிவனருளால் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் படிப்பு படிக்கிறான். அடுத்த வருடம் அவன் வேலையானால் நீ ஒரு வைத்தியனின் தந்தை. உனது மகள் பட்டதாரி ஆசிரியை. அப்படியான தகுதியைச் சிவன் உனக்குத் தந்திருக்கும்போது நீ எப்படி அற்பனாவாய்….? இனிமேல் அப்படிச் சொல்லாதே. நான் சிவபக்தர்களைச் சிவனாக நினைத்து வணங்குபவன்" என்று கைகூப்பினார் கதிரேசன்.

**ஆற்ற கில்லேன் அடியேன் அரசே அவனி தலத்தைம் புலனாய**

**சேற்றி லழுந்தாச் சிந்தைசெய்து சிவனெம் பெருமானென்றேத்தி**

**ஊற்று மணல்போல் நெக்குநெக் குள்ளே உருகி ஓலமிட்டுப்**

**போற்றிநிற்ப தென்றுகொல்லோஎன் பொல்லா மணியைப்**

**புணர்ந்தே 02**

கதிரேசன் கைகூப்பி வணங்கியதும் திருச்செல்வம் அதிர்ச்சியடைந்து விட்டான். அவன் அவரின் வீட்டு வேலைகளைச் செய்தவன். மகள் ஆசிரியை ஆனதும் அவள் அவரை முதுமை காரணமாக வேலை செய்யக்கூடாது என்று தடுத்துவிட்டாள். அதன்பின் அவன் அடிக்கடி அங்கு வந்து ஏதாவது வேலைகள் செய்வான். அதைக் கதிரேசன் விரும்பவில்லை. அவர் அவனது மகளான சகுந்தலையை மதித்தார். அவள் வந்து சொன்னாள்; "அப்பா ஏற்கனவே நோயாளி. எம்மை வளர்க்க வேண்டும் என்பதற்காகத் தனது இயலாமையையும் பொருட்படுத்தாமல் வேலை செய்வதாகச் செய்தவர். ஆனால் செய்யவில்லை. நீங்கள் பெரியவர். சிவனடியார் அதனால் எமது முன்னேற்றத்திற்கு வழிவகுத்தீர்கள். இனிமேல் அவர் ஓய்வாக இருக்கட்டும்" என்று வணங்கியவள். அதனால்தான் திருச்செல்வத்தை வேலை செய்ய அவள் விடுவதில்லை.

"திருச்செல்வம் நீ இங்கு வா, தேவையில்லாத மதிப்புத்தராதை. உன்னைக் கொண்டு வேலை செய்விப்பது பாவம். அதனால் தான் உனது மகளின் வேண்டுகோளை ஏற்றேன். மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல, "நிலவுலக இன்பங்களை அனுபவிக்கச் சொல்லும் ஐம்பொறிகளையும் விலக்க வேண்டும். அவை என்றும் துன்பத்தையே தரும். சிந்தையைச் சிவன்பால் செலுத்துதல் வேண்டும். ஊற்றுநீர் மலையைப் பெயர்த்தெடுப்பது போன்று சிவபோதம் சீவபோதத்தைக் கலைக்கிறது.

அதாவது சிவநினைவு உடலின் மீதுள்ள பற்றைக் கலைக்கும். அந்தநிலை எப்போது வரும் என மாணிக்கவாசகரைப்போலக் காத்திருக்கிறேன். அதை நீ குழப்பகிறாய். சிவனடியான் இன்னொரு சிவனடியானை மதித்துப் போற்றி வணங்குதல் வேண்டும். நீ எவ்வளவு அன்பைச் சிவன்மீது வைத்திருக்கிறாயோ அதைவிட நூறுமடங்கு அன்பைச் சிவன் உன்மீது வைத்திருப்பான். தொழில்வேறு, சிவபக்திவேறு. இப்போ நீ எனது தொழிலாளி அல்ல. சிவனின் அடியவன். அதனால் யாராவது உன்னைக் குறைகூறுவார்கள் என்று நினையாது சிவனடியானாக நடந்து கொள். இல்லாவிட்டால் இங்கு வரவேண்டாம்" என்றார் கதிரேசன்.

**நீண்டமாலும் அயனும் வெருவ நீண்ட நெருப்பை**

**விருப்பிலேனை ஆண்டுகொண்ட என் ஆரமுதை**

**அள்ளூறுள்ளத் தடியார்முன் வேண்டுந் தனையும்**

**வாய்விட்டலறி விரையார் மலர் தூவிப் பூண்டு கிடப்ப தென்று**

**கொல்லோஎன் பொல்லா மணியைப் புணர்ந்தே 03**

"திருச்செல்வம், நான் சிவனின் அடியவன். சிவனை உள்ளன்போடு வணங்குபவர்களைச் சிவனாக எண்ணுபவன். அப்படியானவர்களுக்குச் செருக்கு இருக்கக்கூடாது. செருக்கடைந்த திருமால் உலகை அளந்தபோதும் சிவனை அறிய முடியாமைக்குக் காரணம் தான்தான் பெரியவனென்ற செருக்கு. அதனால் சிவன் அவர்களுக்கு அறியாத பொருளாகவே என்றும் இருக்கிறான். செருக்கற்ற அடியார்களை வலிய வந்து ஆட்கொள்வான். தேவையான உதவிகளைச் செய்வான். நீ உண்மையான சிவனடியான். செருக்கென்பது உனது பரம்பரையில் இல்லை. உனது மகனும் மகளும் சாதிபராது சிவனடியார்களை மதிப்பார்கள். ஒருநாள் பறைமேளம் அடிக்கும் வரதன் மிக்க ஆச்சரியத்துடன் என்னிடம் வந்து சொன்னான், "ஐயா, திருச்செல்வம் ஐயாவின் மகன் என்னை "அண்ணை" என்றுதான் அழைப்பான். ஒருபோதும் மற்றவர்களைப்போல 'வரதா' என்று அழைக்கமாட்டான். அப்படி அழைத்தபோது அருகில் நின்ற அவனது இனத்தவன் ஒருவன், "பறைமேளம் அடிப்பவனை அண்ணை என்று மதிப்போடு அழைத்தால் அவன் எம்மை மதிப்பானா…?" என்று கேட்டதற்கு அவன் சொன்னான்; "எனது தந்தைக்குச் சமனான கதிரேசன் அவர்கள் சிவனடியார்களை மதித்துப் போற்றி வணங்க வேண்டும்" என்று சொல்வார். வரதனைப்போல ஒரு சிவனடியார் இங்கில்லை. அதனால்தான் அவ்வாறு அழைத்தேன்" என்றவன் என்று கூறியபோது நான் அதிசயப்படவில்லை. நீ கர்வமில்லாது இருப்பதால்தான் உனது பிள்ளைகளும்,

கர்வமில்லாது இருக்கின்றனர். அதனால்தான் சிவன் உதவிக் கொண்டேயிருக்கிறார். அப்படியான சிவனை உரக்கப்போற்றி மலர்தூவி அவனோடு இணைந்திருப்பது எப்போதோ" என மாணிக்கவாசக சுவாமிகள் அங்கலாய்க்கிறார். அதையே நானும் விரும்புகிறேன். அதனால் நீ என்னை ஒரு சிவனடியார் என்று நினை. நீயும் சிவனடியான் என்பதை மறவாதே" என்றவர் கதிரேசன்.

**அல்லிக் கமலத் தயனும் மாலும் அல்லா தவரும்**

**அமரர்கோனுஞ் சொல்லிப் பரவும் நாமத் தானைச் சொல்லும்**

**பொருளும் இறந்த சுடரை நெல்லிக் கனிணைத் தேனைப்**

**பாலை நிறையின் அமுதை அமுதின் சுவையைப்**

**புல்லிப் ர்ணர்வ தென்றுகொல்லோ என் பொல்லா மணியைப்**

**புணர்ந்தே 04**

அன்று பறைமேளம் அடிக்கும் வரதன் மிகுந்த வேதனையொடு கதிரேசனது வீட்டுக்கு வந்து வேப்பமரநிழலில் அமர்ந்தான். அதன் பின் வந்த திருச்செல்வமும் அவனுக்கருகில் வந்து அமர்ந்து கொண்டான். கதிரேசன் சிவபூசையை முடித்துக்கொண்டு வெளியே வந்தபோது இருவரும் எழுந்து நின்று வணங்கினர். பதிலுக்கு கதிரேசனும் வணங்கினார். இருவரும் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தனர். வரதனது முகம் என்றுமில்லாதவாறு வாடிக் கறுத்திருந்தது. வரதன் சொன்னான்; "ஐயா, உயிரின் மீதுள்ள ஆசையை அறுத்தாலும் அது சில சமயங்களில் மனதில் எழுந்து துன்பத்தைத் தருகிறது. எனது மூத்த மகனின் மகள் க. பொ. த சாதாரண வகுப்பில் படிக்கிறான். பாடசாலையால் வரும்போது வேகமாக வந்த வாகனம் ஒன்று மோதிவிட்டது. தலையில் பலத்த காயம். இன்னும் மயக்கம் தெளியவில்லை" அழுதான் வரதன்.

"வரதா, சிவநாமத்தை மறக்காது சொல்லும் நீயா கவலைப்படுகிறாய்.? எல்லாம் சிவன் செயல் என்று சொல்லும் நீ தைரியத்தை இழக்கலாமா…? சிவனின் நாமத்தை மாலும் அயனும் சொல்கின்றனர். அதைவிட எல்லாத் தேவர்களும் சொல்கின்றனர். மக்களும் சொல்கின்றனர். சிவன் சொற்களால் வர்ணிக்க முடியாத சோதிப்பிழம்பு. அத்துடன் அவனது வடிவம் வணங்குபவர்களைப் பேரானந்தப்படுத்துவது. சீவபோதத்தை இழந்தால் தான் அவனை அடையலாம் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். சீவன்களில் உள்ள பற்றை இழப்பதென்பது உறவைத் துண்டிப்பதல்ல.

அதன் மேல் உள்ள விருப்பத்தை இல்லாமல் செய்வது. பறவைகள், மிருகங்கள் எல்லாம் தாய்மைப்பற்றுள்ளவை. பறவைக் குஞ்சுகளுக்கும், மிருகங்களின் குட்டிகளுக்கும் இரைதேடும் வயது வந்ததும் அவை தானாக இரைதேடப் பழகிவிடும். அதன் பின் அவை தனித்துத் தன் தேவைகளைக் கவனிக்கும். அப்படித்தான் மனிதனும் வாழப் பழக வேண்டும். நடப்பது விதிப்படி நடக்கும். அதைவிடச் சிவன் விதியை மாற்றுவான். அதனால் சிவனை முழுமனதுடன் வணங்க வேண்டும். சிவனில் நம்பிக்கை உள்ளவன் மனம் கலங்கமாட்டான். தைரியவானான நீ சிவனை வணங்குவதை விட்டு விட்டு ஏன் இங்கு வந்தாய்"? என்று பேசிக் கொண்டிருக்கும்போது வரதனின் கைத்தொலைபேசியின் மணி அடித்தது. அதை எடுத்துப் பார்த்த வரதன் சொன்னான்; "மகள் தான் அழைப்பில் இருக்கிறாள். பேர்த்திக்குக் கடுமையோ தெரியாது" என்று கலங்கியபடி கைத்தொலைபேசியை இயக்கினான் வரதன், "அப்பா, இப்ப கௌரிக்கு நினைவு வந்துவிட்டது. உங்களின் பிரார்த்தனை வீண்போகவில்லை" என்றாள்.

வரதன் பூரிப்புடன் சிரித்தவாறு; "எனது சிவன் எனக்கு உதவி செய்யாமல் விடுவாரா…?" என்றான்.

"இந்த நம்பிக்கை முன்பே இருந்திருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டாய்" என்றார் கதிரேசன்.

"உண்மைதான் ஐயா, உயிரின் மேலுள்ள பற்று எதையும் சிந்திக்க விடுவதில்லை. அந்தப் பற்றான சீவபோதம் அழிந்தால் தான் சிவனது கிருபை கிட்டும். அது எப்போ அழியப் போகிறது" என்றான் வரதன்.

**திகழத் திகழும் அடியும் முடியுங் காண்பான் கீழ்மேல் அயனும்**
**மாலும் அகழப் பறந்துங் காண மாட்டா அம்மான் இம்மா**
**நிலமுழுதும் திகழப் பணிகொண்டென்னை ஆட்கொண்டு ஆ**
**ஆ என்ற நீர்மையெலாம் புகழப் பெறுவ தென்று கொல்லோ**
**என் பொல்லா மணியைப் புணர்ந்தே. 05**

"வரதா, அயனும் மாலும் உயரப் பறந்தும் நிலத்தை அகழ்ந்தும் காணமுடியாத அகண்ட சோதியானவன் சிவன். அவனது அடியையும் முடியையும் தேவர்களால் கூடக் காணமுடியாது. அத்தகையவன் ஒரு பிராமணனாக வந்து என்னை

ஆட்கொண்டான். அவனது மகிமையைப் போற்றிப் புகழ்ந்து அவனோடு எப்போ நான் சேரப் போகிறேன்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் ஏங்கி அங்கலாய்க்கிறார். தேவர்களும் கண்டறியாத சோதிப்பிழம்பான சிவனை அன்பினால் கண்டறியலாமென்று மாணிக்கவாசகருக்குத் தெரியும். இதை உன்போன்றவர்களுக்காகத்தான் சொல்கிறார். சிவனடியார்கள் துன்பப்படும்போது சிவனைப் போற்றுங்கள். உங்களுக்கு வந்த துன்பம் பறந்துவிடும் என்று சொல்லும் நீ உனக்குத் துன்பம் வந்தபோது அதை நினைக்காதது ஏன். அதுதான் சீவபோதம். சிவபோதம் என்பது உறவுகள் மீது வைக்கும் பாசம். அதை நீக்கப்பார். நீக்குவதென்பது அவர்களை வெறுத்தலோ பிரிதலோ அல்ல. அவர்களது துன்பத்தை அவர்களே சிவனைப் பிரார்த்தித்து நீக்கட்டும் என்ற நிலையை உறுதிப்படுத்து. சரி நீ போய் உனது போர்த்தியைப் பார்” என்று கதிரேசன் சொல்ல வரதன் எழுந்து சென்றான். அவன் சென்றதும் திருச்செல்வம் சொன்னான்; “எனது மகளுக்குத் திருமணம் பேசி வந்திருக்கு. அதை நான் சிவனிடம் எப்போதோ ஒப்படைத்துவிட்டேன். சிவன் நல்லதொரு மாப்பிள்ளையைத் தருவான் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதனால் எல்லாம் சிவன் செயல் என்றிருக்கிறேன்”.

“நல்லது மகனே, எதற்கும் ஒருமுறை விசாரித்துப் பார். சிவன் உனக்குக் கெடுதல் செய்ய மாட்டான். இருப்பினும் யார் எவர் என்று அறிந்து கொள்வது பிழையில்லை. விதிவசத்தால் எதுவும் நடக்கலாம். அதை அறிந்து சிவனைப் பிரார்த்திப்பது அவனுக்கு நன்றி சொல்வது போலாகும்”.

“இல்லை ஐயா, ஒவ்வொன்றையும் அவரவரே சிவனிடம் முறையிட்டு அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுக்குச் சிவனின்மீது நம்பிக்கை வரும். கடவுளை வணங்குவர். நான் மகள் என்ற கடமைக்காகச் சிவனிடம் சொல்லி விட்டேன். அவர் எனக்குத் துன்பம் வரவிடார். மாப்பிள்ளை உங்களுக்குத் தெரிந்தவர்தான். பொன்னுத்துரையின் மகன் கந்தசாமி” என்றான் திருச்செல்வம்.

“கந்தசாமி பெரும் சிவபக்தன். சிவனையே நம்பி வாழ்பவன். மிகவும் உயர்ந்த இடம். நீ பாக்கியவான்” என்றார் கதிரேசன்.

“இல்லை ஐயா, இது சிவனின் பேரருள். அவன் எனக்காக இதைச் செய்துள்ளான்” என்றான் திருச்செல்வம்.

“இப்போ உனக்குச் சிவபோதம் வரத்தொடங்கி விட்டது. திருவாசகத்தைப் படித்துத் திருவாசகமாகி விட்டாய்” என்றார் கதிரேசன்.

**பரிந்து  வந்து பரமானந்தம் பண்டே அடியேற் கருள் செய்யப்**

**பிரிந்து போந்து பெருமா நிலத்தில் அருமா லுற்றேன்**

**என்றென்று சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர் உரோமஞ்**

**சிலிர்ப்ப உகந்தன்பாய்ப் புரிந்து நிற்பதென்று கோல்லோ என்**

**பொல்ல மணியைப் புணர்ந்தே 06**

"திருச்செல்வம், சிவோகம் என்ற அனுபூதியைச் சிவன் என்றோ எனக்குத் தந்துவிட்டார். ஆழ்ந்த உலகப் பற்றால் அப்பெருநிலையில் இருந்து பிரிந்து விட்டேன். இனி அழுதும் மனம் வருந்தியும் பக்தி பண்ணியும் அப்பெருநிலையை நான் மீண்டும் எப்போது பெறப் போகிறேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் வேதனைப்படுகிறார். இது சராசரி மனிதர்களுக்குப் பொருத்தமானது. சற்றுமுன் வரதன் சொன்னதைக் கேட்டாய்தானே. வரதன் எவ்வேளையிலும் சிவநினைவாகவே இருப்பான். சிவனை முழுமையாக நம்பியவன். சிவன் தனக்குத் துன்பம் தரமாட்டான் என்று உறுதியாக நம்புபவன். அப்படியிருந்தும் தனது பேர்த்தி விபத்தில் அகப்பட்டு மயங்கி விட்டாள் என்று அறிந்ததும் சிவனை மறந்து விட்டான். தனக்குச் சிவன் உதவமாட்டான் என்ற ஐயம் அவனது மனதை ஆக்கிரமித்துவிட்டது. அதனால் அவன் துவண்டு போனான். இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். முழுமையாக நம்பியிருந்த வரதனின் மனதில் நம்பிக்கையீனம் வந்துவிட்டது. அதைச் சரிசெய்ய முடியாது. தற்செயலாக விதிப்படி அப்பிள்ளை இறந்திருந்தால் வரதனின் மனதில் சிவன் மீதிருந்த நம்பிக்கை போய்விடும். சிவன் பக்தர்களுக்கு உதவுவார்தான். ஆனால் பக்தர் மார்க்கண்டேயரைப்போல இருத்தல் வேண்டும். சிறு துன்பம் வந்தாலே நம்பிக்கையை இழப்போரைக் குறித்துத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் தன்னை உதாரணமாகக் கொண்டு உலகியலை விளக்குகிறார்" என்றார் கதிரேசன்.

**நினையப்பிறருக் கரிய நெருப்பை நீரைக் காலை நிலனை**

**விசும்பைத் தனையொப் பாரை யில்லாத தனியை நோக்கித்**

**தழைத்துத் தழு த்தகண்டம் கனையப் கண்ணீர் அருவி பாயக்**

**கையுங் கூப்பிக் கடிமலராற் புனையப் பெறுவதென்று**

**கொல்லோ என் பொல்லா மணியைப் புணாந்தே 07**

வரதன் வேர்த்து விறுவிறுக்க கதிரேசனின் முன் நின்றான். அவனது உடல் நடுங்கியது. அவனால் பேச முடியவில்லை. தடுமாறினான்.

“வரதா, பதட்டப்படாதே. ஆசனத்தில் இரு; “திருச்செல்வம் உள்ளே சென்று சுடச்சுடத் தேநீர் வாங்கிவா” என்று திருச்செல்வத்துக்குச் சொன்னார் கதிரேசன். வரதன் முன்பைவிடத் தடுமாறினான். “அமைதியாக இரு. இப்போ உனக்கு என்ன நடந்தது” என்று கதிரேசன் கேட்டவாறு மேசையில் இருந்த பனை ஓலையால் செய்யப்பட்ட விசிறியை எடுத்து விசுக்கினார். அப்போது திருச்செல்வம் தேநீர் கொண்டு வந்து கொடுத்தான். அதைக் குடித்தான் வரதன்.

“ஐயா, இவ்வளவு காலமும் சிவனை முழுமையாக நம்பியிருந்தேன். பேர்த்தி விபத்துக்கள்ளாகி மயக்கமான நிலையில் இருந்ததும் நான் தடுமாறி விட்டேன். பகிரங்கமாக நான்; “கல்லுக்குப் பூப்போட்டு வணங்கியது எனது பிழை. கல்லுக்கு இருதயம் இருந்தால் தான் உணர்வுகளும் இருக்கும்” என்று வாயில் வந்தபடி சிவனை ஏசிவிட்டேன். அது எவ்வளவு பிழை என்று இப்போதுதான் தெரிகிறது. பேர்த்தி அதிர்ச்சி காரணமாகத் தான் மயங்கியவள் என்றும், அவளுக்குப் பெரிதாகக் காயங்கள் எதுவும் இல்லை. நல்லகாலம் நீங்கள் வணங்கும் சிவன் அவளைக் காப்பாற்றிவிட்டார் என்று வைத்தியர் சொன்னார். நான் பேர்த்தியைப் பார்க்க உள்ளே சென்றேன். அவள் கட்டிலில் எழுந்திருந்து சிரித்த முகத்துடன் என்னை வரவேற்றாள் பின்; “தாத்தா, நான் மயக்கத்தில் இருந்தபோது உங்களைக் கனவில் கண்டேன். நீங்கள் சிவனைப்போல மான்தோல் அணிந்து நாகத்தை மாலையாகப் போட்டிருந்தீர்கள். உங்கள் சடையில் பிறைச்சந்திரனும் கங்கையும் இருந்தது; “உனக்கு ஒன்றுமில்லையம்மா எழுந்து கட்டிலில் இரு” என்று சொன்னீர்கள். நான் அதைக்கேட்டு அறிவிழந்து விட்டேன். “ஐம்பூதங்களால் ஆன பிரபஞ்சமும் சிவனும் இரண்டு அல்லாத பொருள். இதை யாரும் அறிவதில்லை. ஒப்பற்ற அந்தப் பொருளைப் பார்த்தும், பூசிக்கவும், பாடிப் பணியவும், கண்ணீர் பெருக்கவும், கையால் நறுமலர்கள் கொண்டு அலங்கரிக்கவும் செய்வது எப்போது..?” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கேட்கிறார். ஏனென்றால் தன்னை ஆட்கொண்டபின் தான் ஒழுங்காக வணங்கவில்லை என்கிறார். மனிதர்கள் எப்படித்தான் உதவிகளைச் செய்தாலும் ஒரு கணம் ஏற்படும் அவசர புத்தியால் ஆராயாது கதைத்து விடுகின்றனர். ஐம்பது வருடங்களாக நம்பிப் போற்றிய சிவனை ஒரு கணத்தில் பற்றால் மறந்து விட்டேன். இனி எப்படி நான் அவனை வணங்குவது. போற்றிப் புகழ்ந்து பாடுவது. பூசை செய்வது. நான் நிந்தித்தபோதும் எனதுருவில் சென்று எனது பேர்த்திக்கு உயிர் கொடுத்த சிவனை நான் அவமதித்து விட்டேன்” என்று அழுதான் வரதன்.

**நெக்குநெக்குள் உருகி உருகி நின்றும் இருந்தும் கிடந்தும்**

**எழுந்தும் நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற்**

**கூத்தும் நவிற்றிச் செக்கர்போலும் திருமேனிதிகழ நோக்கிச்**

**சிலிர்சி லிர்த்துப் புக்கு நிற்ப தென்றுகொல்லோ என் பொல்லா**

**மணியைப் புணர்ந்தே 08**

"ஐயா, சிவன்மீது இருந்த பக்தியின் மேலீட்டால் மனம் உருகியும், இருந்தும், கிடந்தும், எழுந்தும், சிரித்தும், அழுதும், தொழுதும், வாழ்த்தியும், கூத்தாடியும் உடல் சிலிர்த்தும் இருந்த நான் சிவனது செம்மேனியின் அழகை பார்த்து உடல் புளகாங்கிதம் அடைய இருப்பது எந்நாளில் என மாணிக்கவாசக சுவாமிகள் துன்பப்படுவதுபோலத் தான் நானும் துன்பப்படுகிறேன். ஒரு கணம் கூட அவனை நினையாதிருந்ததில்லை. பறைமேளம் அடிப்பது குலத்திற்கு அவமானம் என்று உறவினர்களும் பெற்றோரும் என்னை விலக்கி வைத்தபோதும் அஞ்சாது சிவனே துணை என்று நினைத்துப் பறைமேளத்தை அடித்தவன் நான். நான் பறை மேளம் அடிப்பதால் நல்ல நிலையிலுள்ள எமது சாதிக்காரன் நல்லது கெட்டதற்கு எனக்குச் சொல்வதில்லை. எத்தனைபேர் முகத்தை மூடிக்கொண்டு இரவில் தன்னைக் காட்டாது எனக்கு அடித்திருப்பார்கள். அப்படியான நேரங்களில்கூட நான் கலங்கியதில்லை. அப்போதெல்லாம் எனக்குச் சிவன் உதவி வந்தார். ஒரு நாள் எனது மருமகன் கோவிலடியில் வைத்து எனக்கு அடித்தவன். அப்போது இவ்வூருக்குக் காவல்துறைக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி; "அவன் சிவத்தொண்டன், நானும் சிவத்தொண்டன். சிவன் கோவிலைக் கூட்டுவது, கழுவுவது, சிவனைக் காவுவது மட்டும் சிவத்தொண்டல்ல. சிவனுக்குப் பிடித்தமான இசை பறைமேளத்தின் இசை. அதைத் தெரிந்து வைத்துக்கொண்டு தினமும் பூசை வேளையில் பறையடித்துச் சிவனை ஆனந்தப்படுத்தும் வரதனை யாராவது ஏசினால்கூட அவர்களைப் பிடித்து அடித்து உதைத்துச் சிறையில் வைப்பேன் என்று கூறியதால்தான் அதன்பின் யாரும் என்னைத் தாக்குவதில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் கூறியதுபோல இருந்தும், நின்றும், கிடந்தும், அழுதும், தொழுதும் வணங்கிய நான் இனி எப்படி வணங்குவேன்" என்று அழுதான் வரதன்.

"வரதா, சிவன் எமது தந்தை. அவர் பிள்ளைகள் செய்யும் குற்றங்களைக் கணக்கில் எடுப்பதில்லை. நீ உனது மகளுடன் நீண்ட நாட்களாகக் கதைப்பதில்லை. பேர்த்திக்கு நோய் என்றதும் எல்லாவற்றையும் மறந்து சென்றுவிட்டாய். அதுபோலச் சிவன், நீ கண்டபடி ஏசியமையால் கோபங் கொண்டிருந்தால் உனது வடிவில் உனது

பேர்த்தியிடம் சென்றிருப்பாரா…? எல்லாவற்றையும் மறந்து இரவுப் பூசைக்கு பறைமேளத்தை அடி” என்றார் கதிரேசன்.

**தாதாய் மூவே ழுலகுக்குந் தாயே நாயேன் தனையாண்ட**

**பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே பெருந்தேன் பில்க**

**எப்போதும் ஏதா மணியே என்றென்றேத்தி இரவும் பகலும்**

**எழிலார்பாதப் போதாய்ந் தணைவதென்று கொல்லோ என் பொல்லா**

**மணியைப் புணாந்தே 09**

அன்று இரவுப் பூசைக்கு வரதன் பறைமேளம் அடித்தான். கடந்த இரண்டு நாட்களாக குடும்பத்தினரின் வற்புறுத்தலுக்காக பறைமேளத்தை அடிக்காது விட்டான். அன்று அடிக்கத் தொடங்கியதும் மனதுள் சிவனின் நினைவு என்றுமில்லாதவாறு ஆற்று வெள்ளம்போலக் கரைபுரண்டு ஓடியது. எல்லாம் சிவனின் அருள் என்று நினைத்தான்.

முதல் நாள் அவனது மகன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. “அப்பா, இரவு, பகலாகச் சிவன், சிவன் என்று சொல்லி நாம் தடுக்கத் தடுக்கப் பறைமேளம் அடிக்கிறீர்களே அதனால் என்ன லாபம் கிடைத்தது. வீதி ஓரமாக நின்ற எனது மகளைக் குடித்துவிட்டு வாகனத்தை ஓட்டிவந்த ஒருவன் மோதிவிட்டான். அதுவும் அவளுடன் ஆறுபேர் நின்றவை. ஏனையோருக்குச் சிறுகாயங்கூட ஏற்படவில்லை. எனது மகள் சாகக் கிடக்கிறாள். இது தானா உங்கள் சிவனின் கருணை. மிக மிகக் கேவலமான செயலை நீங்கள் செய்வதால் எம்மை யாரும் மதிப்பதில்லை. சரி ஏதாவது பயன் இருக்குமானால் செய்யலாம். என்ன பயனைக் கண்டீர்கள். இனிமேல் நீங்கள் பறை அடிக்கக்கூடாது. எனது மகள் இறந்தால் நானும் செத்துப் போவன். அதன்பின் நீங்கள் தடையின்றி அடிக்கலாம்” என்று கலங்குங்குரல் எடுத்து அழுதவள்.

“பறைமேளம் அடிப்பதனாலா எம்மை மற்றவர்கள் மதிப்பதில்லை. நீ ஆசிரியை உனது கணவன் செயலகத்தில் பெரும் பதவியில் இருப்பவன். அதனால் உங்களை யாரும் மதிக்கிறார்களா..?” என்று கேட்க நினைத்தவன். நாவை அடக்கிக் கொண்டான்.

இரவுப்பூசை முடித்து அவன் வீட்டுக்குச் சென்றபோது கதிரேசனும் அவனுடன் கூட வந்தார். அவர் முன்பும் இரு தடவை வந்தவர். கதிரேசனைக் கண்ட வரதனின் மகள் ஓடிவந்து அவரை வரவேற்றாள்.

“நாம் நினைத்தபடியா யாவும் நடக்கிறது. நான் எனது மகள் உயிர் பிழைப்பாள் என்று நினைக்கவில்லை. அதனால் பாசத்தால் அப்பாவைக் கண்டபடி பேசிவிட்டேன். இனி அவர் தனது விருப்பப்படி நடக்கட்டும்” என்றாள்.

“அம்மா, நீ படித்தவள். எதுவும் நாம் நினைத்தவாறு நடப்பதில்லை. இருப்பினும் நாம் மனத்தைத் தேற்றிக்கொண்டு மகிழ்வாகத் தானே வாழ்கிறோம். சுந்தரேசன் தான் காதலித்துத் திருமணம் செய்த அன்பு மனைவி திருமணமாகி ஒரு வருடம் கழியுமுன் நோயால் இறந்து விட்டாள். அன்று அவன் பட்ட துயரத்தைக்கண்டு ஊரே அதிர்ந்தது. கத்தினான், குழறினான், பித்துப் பிடித்தவன் போல அலட்டினான், உடன்கட்டை ஏறப்போறன் என்றான். அவள் செத்து மூன்று மாதங்கள் கூடக்கழியாத நிலையில் தனது அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து விட்டான். இது தானம்மா உலகம். அதற்காகக் கடவுளை நாம் வெறுக்கக்கூடாது, “சிவன் உயிர்களுக்கு மட்டுமல்ல உலகங்களுக்கே அவன்தான் தந்தை. பழைமையான ஞானபூமி ஏழுக்கும் அவன்தான் தந்தையும் தாயுமானவன். என்னை ஆட்கொண்ட பித்தன். பிறவிநோய்க்கு மருந்தானவன். அமிர்தம் போன்ற ஞானச்சோதி, உனது திருவடித் தாமரையை நாம் அடைவது எப்போது” என்று மாணிக்கவாசக சுவாமிகள் ஏங்குகின்றார். அதைத்தான் வரதனும் செய்கிறான். வரதன் பெரும் சிவபக்தன். நீங்கள் எல்லோரும் சேர்ந்து வற்புறுத்தியதால் அவன் பறைமேளத்தை அடிக்கவில்லை. ஆனால் அவனின் மனது அதை அடித்துக் கொண்டிருந்தது. அதனால்தான் உனது மகள் உயிர் பிழைத்தவள் என்று நீ சிவனை வணங்கியுள்ளாய்” என்றபோது,

வரதனின் மகள் சொன்னாள்; “அந்த நேர நிலைப்பாட்டில் நாம் ஒரு தவறான முடிவை எடுத்துவிட்டோம். அது தவறு என்று இப்போது தெரிகிறது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைப் பித்தா என்கிறார். அதுபோலச் சுந்தரமூர்த்தி நாயனாரும் பித்தா என்றவர்” என்று கூறும்போது கதிரேசன் சொன்னார்,

“மகளே, சிவனை எப்படியும் பேசலாம். அவற்றையெல்லாம் அவன் கவனத்தில் எடுப்பதில்லை. தந்தையும் தாயுமான அவன் எல்லாவற்றையும் பொறுத்து அருள் செய்வான். நீங்கள் ஏசியபோதும் அவன் நன்மையைத் தானே செய்தவன்” என்றார் கதிரேசன்.

**காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங் கண்ணார் விசும்பின்**
**விண்ணோர்க்கெல்லாம் முப்பாய் மூவா முதலாய் நின்ற**
**முதல்வா முன்னே எனையாண்ட பார்ப்பானே எம்பரமா என்று**
**கொல்லோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே 10**

“ஐயா, இந்த ஊருக்கு நீங்கள் சிவனின் அருட்செயல்கள் பலவற்றை எடுத்துச்சொல்லி வருகிறீர்கள். அத்துடன் முறைப்படி சைவசமயத்தவனாக வாழ்கிறீர்கள். உயர்வு தாழ்வு பாராது எல்லோரையும் சமமாக மதிக்கிறீர்கள்” என்று வரதன் சொன்னபோது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னார்.

“வரதா, மேலே சொல்லாதே. நான் சிவனின் அடிமை. அதனால் சிவனடியார்க்கும் அடிமை. சிவனை வணங்குவோர் எப்படி வாழவேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி வாழ்கிறேன். மற்றவர்களும் அப்படி வாழவேண்டும் என்று விரும்புகின்றேனே தவிர வற்புறுத்தவில்லை. அனைத்தையும் படைத்துக் காத்து அழித்து அருளி மறைப்பவன் சிவன். அவன்தான் முதலில் தோன்றியவன். பின்பு பிறந்தவர்களெல்லாம் அழிந்து போக அவன் மட்டும் அழியாது மிகுந்த இளமையோடு இருக்கிறான். மூலப்பொருளான அவன் மாணிக்கவாசகரை மிகவும் இளவயதில் ஆட்கொண்டவன். அதனால் அவர் நான் பக்குவமாவதற்கும் முன் என்னை ஆட்கொண்ட வேதிய பரமனே என்று நான் பாடி உன்னை அடைவது எப்போது” என்று கேட்கிறார். சிவனும் சில முனிவர்களும் திருக்கைலாயத்தில் இருந்து திருவாவடுதுறைக்கு வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டவர். பின் சிவனும் வந்த முனிவர்களும் திரும்பவும் கயிலாயத்திற்குச் சென்றபோது தாமும் அவர்களுடன் செல்ல ஆயத்தமானார். அப்போது சிவன், “உனக்குப் பூமியில் நிறைய வேலைகள் உண்டு. அதை நல்லமுறையில் நீ முடித்தபின் நானே வந்து உன்னை அழைத்துச் செல்வன்” என்றார். அதனால் அதைச் சிவனுக்கு அடிக்கடி மாணிக்கவாசக சுவாமிகள் ஞாபகப்படுத்துகிறார். அவருக்கு எல்லாம் நினைவில் இருந்த போதும் சிவனடியார்கள் அடிக்கடி நினைவுபடுத்துகின்றனர். அவன் எல்லோருக்கும் முன் தோன்றியமையால் பின் அவனால் தோற்றுவிக்கப்பட்ட-வர்களின் முழு விபரமும் அவனுக்குத் தெரியும்” என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.